# 11

## யேசபேல்

# பிசாசின் ஊழியக்காரி

*வேதபாடப் பகுதி: 1 இராஜாக்கள் 16:29-22:40*

*ஒரு சுவிசேஷப் பிரசங்கியார்: இவரை நாம் எவ்வாறு விவரிக்க வேண்டும்? அவர் கொண்டுள்ள பண்புகள் யாவை, மற்றும் அவர் என்ன செய்கின்றார்? வசனத்திற்குத் தேவனுடைய ஊழியக்காரர் என்பதற்குப்[1] புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்திய தனிப்பட்ட கிரேக்க வார்த்தைகளை ஒன்றிணைத்தால், நாம் பின்வரும் பத்தி-விளக்கத் திற்கு வருவோம்:*

> *ஒரு சுவிசேஷ ஊழியக்காரர் என்பவர் கிறிஸ்துவைப் போன்றவராக, சுவிசேஷத்தின் முழுமையான நற்செய்தியை உறுதிப்பாட்டுடனும் அன்புடனும் தைரியமாய் அறிவிக்கின்றார். அவர் வேதவசனங்களின் அதிகாரத்துவத்தின்படி அனுப்பப்பட்டுள்ள அறிவிப்பாளராக, தமது செய்தியைக் கேட்பவர்களுக்குச் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வதன் அவசியம் பற்றிப் புத்திகூறுபவ ராகவும், தேவனுடைய அழைப்பை ஏற்று அதிலே நடந்துகொள்ளும் படிக்கு அந்த அழைப்பை விடுப்பவராகவும் இருக்கின்றார்.*

*பிரசங்கத்தின் மிகச்சரியான எந்தத் தொகுப்புரையும், ஊழியத்தின் அத்தியாவசியமான கூறுகளான பின்வருபவற்றைத் தொடுவது அவசிய மாயிருக்கும்: (1) மனிதரின் பண்பு, (2) அவரது உரையின் நடை, (3) அவர் மேற்கொண்டுள்ள ஊழியம், (4) அவரது ஊழியத்தின் அளவு, மற்றும் (5) அவர் எடுத்துரைக்கின்ற செய்தி.*

*இந்த பண்புகள் யாவும் ஒரு மனிதரில் ஒன்றுகூட்டி இடப்படும்போது மற்றும் தெய்வீகச் சமானநிலை பராமரிக்கப்படும்போது, நாம் தேவனு டைய திட்டத்தின் குறிக்கல்லைக் காணுகின்றோம். சுவிசேஷப் பிரசங்க ஊழியம் என்பது எந்த ஒரு கிறிஸ்தவரும் ஈடுபடக்கூடிய மிக உயர்ந்த செயலாக உள்ளது.*

*இதிலிருந்து வெளிவரும் சிந்தனை ஒன்றைத் தொடர்வதற்கு, நாம் நாணயத்தை திருப்பி அதில் பிசாசின் ஊழியக்காரனைக் கண்ணோக்கு வதாக வைத்துக்கொள்வோம். அந்த நபர் கொண்டிருக்கும் குணங்கள் என்னவாக இருக்கும்? ஒரு சில விதிவிலக்குகள் தவிர, அவர் நிச்சயமாக சுவிசேஷ ஊழியக்காரருக்கு எதிரானவராக இருப்பார். அவரைப் பற்றிய விவரிப்பு பின்வருவது போன்றிருக்கும்:*

> பிசாசின் ஊழியக்காரன் சாத்தானைப்போன்றவனாக, தனது உரையைக் கேட்பவர்களின் விருப்பத்திற்கு எதிராகக்கூட, பிசாசின் செய்தியையும் பாவத்தையும் ஏற்றுக்கொள்ளும்படி நிர்ப்பந்திப்ப வனாக இருக்கின்றான். அவன் பொல்லாங்கின் நோக்கம் மற்றும் தூண்டுதலுடன் அனுப்பப்பட்டுள்ள பிசாசுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் உடன்ஊழியக்காரனாக இருக்கின்றான். அவன் பிசாசினுடைய செய்தியை ஏற்றுக்கொள்ளும்படி மற்றவர்களுக்குப் புத்திகூறுகின்றான் மற்றும் அவர்கள் தனது செய்தியை ஏற்றுக் கொண்டு, அதிலே நடந்து, அதை மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றான்.

*இந்த இரண்டு விளக்கங்களும், இந்த உலகத்தைத் தொடர்ந்து கொந்தளிக்கச் செய்கின்ற ஆவிக்குரிய போராட்டத்தை நமக்கு நினைவூட்டுகின்றன. இது ஒருபோதும் முடிவு பெறாத யுத்தமாக, அன்றாடம் நடைபெறும் அர்மகெதோன் யுத்தமாக - ஒவ்வொருவரும் போராடியாக வேண்டியதும் எல்லாரும் வெற்றி அல்லது தோல்வியடைவது மாகிய, நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான நிரந்தரமான மோதலா யிருக்கிறது. இது எவரொருவரும் விதிவிலக்கின்றிக் கலந்துகொள்ள வேண்டிய யுத்தமாக உள்ளது. நமது சுயாதீன ஒழுக்கத்தெரிவுகளால் தள்ளப்படுகின்ற, நாம் எப்போதுமே இரு விருப்பத்தெரிவுகளால் எதிர் கொள்ளப்படுகின்றோம், இரு மாறுபட்ட வகையிலான பிரசங்கியார்கள், நித்தியத்தில் இரு மாறுபட்ட அடைவிடங்களுக்கு நடத்துகின்றவைகளான, வாழ்வின் இரு மாறுபட்ட சாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இந்தப் பிரசங்கியார்கள் எல்லா அளவுகளிலும், வடிவங்களிலும் எல்லா வகையான ஆளுமைத் தன்மைகளிலும் திறன்களிலும், எல்லாக்காலங் களிலும் மாறுபட்ட வழிமுறைகளில் நம்மிடம் வருகின்றனர்.*

*நாம் விசேஷமாக, பிசாசின் ஊழியக்காரனைக் கவனிப்போம், ஆனால் ஒரு விளக்கத்தின்மீது நின்று நிதானிப்பதற்குப் பதிலாக, நாம் ஒரு உண்மையான, தெய்வீகப் புகைப்படத்தின் பக்கம் திரும்புவோம். யாரோ ஒருவர், "ஒரு கருத்தைச் சிறந்த முறையில் புரிந்துகொள்வதற்கு, அதை நபரின்மீது போர்த்துங்கள்" என்று கூறினார். அப்படிப்பட்ட நபர்களில் ஒருத்தி, வடக்கு ராஜ்யத்தின் முடியரசர்கள் மத்தியில் - உம்ரிக்கும் யெகூவுக்கும் இடையில் செருகிவைக்கப்பட்டிருக்கின்றாள் - மற்றும் அவளை நாம் கண்டுகொள்ளாது விட்டுவிட இயலாது. இந்தச் சித்தரிப்பை நாம் ஆய்வுசெய்கையில், எசேக்கியேலின் தரிசனத்தில் வந்த கல்லறையில் (எசேக்கியேல் 37) இருந்த எலும்புகளின்மீது நரம்புகளும் மாம்சமும் உண்டானது போன்று, பிசாசின் ஊழியக்காரியினுடைய நமது விவரிப்பிற்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாகும். பின்பு நாம் பிசாசின் இணங்கச் செய்யும் தன்மை எவ்வாறு வேலை செய்கிறது என்பதைப் பற்றிய பயங்கரமான உணர்ந்தறிதலைக் கண்ணோக்குவோம்.*

*நாம் கண்ணோக்குகின்ற இந்தச் சித்தரிப்பு ஒரு ஆணைப் பற்றியதல்ல, ஆனால் ஒரு பெண்ணைப் - வழக்கத்திற்கு மாறான ஒரு பெண், பிசாசை ஆதரிக்கும் ஒரு பெண், இச்சையின்மீது பைத்தியங்கொண்ட ஒரு பெண்*

பற்றியதாக உள்ளது. அவள் யேசபேலன்றி வேறு யாரும் அல்ல. அவளது பெயர் ராஜரீகத்தின் பொருள் கொண்டதாக உள்ளது, ஏனெனில் அவள் தீருவின் அரசரான ஏத்பாகாலின் மகளாகவும், இஸ்ரவேலின் அரசரான ஆகாப் என்பவரின் மனைவியாகவும் இருந்தாள். அவள் இஸ்ரவேலின் அரசரான யோராமின் தாயாக இருந்தாள்; இஸ்ரவேலின் அரசரான அகசியாவுக்குப் பாட்டியாயிருந்தாள்; மற்றும் யூதேயாவின் அரசரான யோராமுக்கு மாமியாயிருந்தாள். அவள் சென்ற மற்றும் பிறர் செல்லும்படி அவள் விரும்பிய பாவத்தின் ஆழங்களினிமித்தம், நாம் அவளைப் பிசாசின் ஊழியக்காரி என்று அழைக்கின்றோம். அவளது வாழ்வு, பிசாசானவன் தனது வேலையாட்களில் ஒருவர் மூலமாக விரும்பக்கூடிய ஒவ்வொரு விஷயத்தினுடைய குணம் கொண்டதாக இருந்தது.

வடக்கு ராஜ்யத்தை [பிசாசின்] போதனைக்கு உட்படுத்துவதற்கான அவளது முயற்சிகளில் அவள் பயன்படுத்திய வழிமுறைகள் நமக்குத் தொடக்க நிலை ஆர்வத்திற்குரியவைகளாய் இருக்கின்றன. அவளது தனிப்பட்ட முயற்சிகள், ஏறக்குறைய இஸ்ரவேல் நாடு முழுவதையும் பாகாலை ஆராதிப்பதற்கு முழங்காலிடச் செய்யக் கொண்டு வருவதற்குக் கருவியாயிருந்தன. இதன்விளைவாக, ஆகாபின் ஆட்சி, இஸ்ரவேலின் வரலாற்றிலேயே யெகோவாவை ஆராதிப்பதில் இருந்து விலகி மாபெரும் வீழ்ச்சியடைவதன் காலத்தைக் கொண்டு வந்தது.[2] யேசபேலை எந்த ஒரு கண்ணோக்கத்தில் இருந்து கண்டாலும், நாட்டை விசுவாச விலக்கத்திற்கு வழிநடத்திச் சென்ற தனது பயங்கரமான பணிப்பொறுப்பில் வெற்றி நிறைந்தவளாகவே கருதப்படுவாள். இதை அவள் எவ்வாறு செய்தாள்? அவள் பயன்படுத்திய தொழில் நுட்பங்கள் என்ன?

## பற்றியெரிந்த வைராக்கியம்

யேசபேலைப் பொல்லாங்கின் வல்லமை நிறைந்த மேம்பாட்டாளியாக்கிய, வழக்கிடமுடியாத அவளது பண்பு, பற்றியெரிந்த, களைப்படையாத வைராக்கியம் ஆகும். அவள் தனது புறதெய்வ வணக்கத்தின் திரளான - உறுப்பினர்களில் ஒருத்தியாய் இருந்துவிடவில்லை; அவள் உள்ளூர் உறுப்பினர்த்துவத்தைக் கொண்டிருந்தாள், மற்றும் அது குறிப்பானதாக, கவனம் குவித்திருப்பதாக இருந்தது. அவளை அறிந்திருந்த யாவரும், அவள் நின்ற நிலை என்ன மற்றும் அவள் எதைச் செய்ய நோக்கங்கொண்டாள் என்பவற்றை அறிந்திருந்தனர். அவள் சிலவேளைகளில் பாகாலியத்தைப் பற்றிய உணர்வெழுச்சியும் மற்ற வேளைகளில் அது இல்லாதிருப்பதுமான மேலோட்டமான உறுதிப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை; மாறாக, இந்தப் புறதெய்வ வணக்கத்தைப் பரப்புவதற்குத் தொடர்ந்திருக்கும் ஒரு தூண்டுதல் அவளது இருப்பின் மையத்தில் இருந்தே வளர்ந்தது.

வடக்கு ராஜ்யத்திற்கு அவள் வந்து சேர்ந்தபின் சற்றுக் காலத்திலேயே, அவள் பாகாலின் அருவருப்பான மதத்திற்கு உக்கிரமான மற்றும் அச்சமூட்டத்தக்க சமயவாதியாக நாடு முழுவதிலும் கருதப்பட்டாள்.

யெகோவாவை விசுவாசித்து இஸ்ரவேலின் மதத்தை நடைமுறைப்படுத்தத் துணியும் எவரும் யேசபேலுடன் போராட வேண்டியிருந்தது.

யோசிப்பஸ் என்ற வரலாற்றாளரின் கூற்றுப்படி, யேசபேலின் தந்தையான, ஏத்பாகால் (இவர் இத்தோபாகால் அல்லது இத்தோபலுஸ் என்றும் அறியப்பட்டிருந்தார்[3]) தீருவின் அரியணையை அபகரித்திருந்தார், இவர் அஸ்தரோத்தின் ஆசாரியராக இருந்தார் (16:31). பெனிக்கியரின் தெய்வமான பாகால்மீது அவர் கொண்டிருந்த வலிவார்ந்த பற்றார்வ மானது, அவர் தமது மகளும் பாகாலைப் பக்தியுடன் ஆராதிப்பவளாய் இருக்கும்படி அவளுக்குப் போதிக்க ஏவியிருக்க வேண்டும். ஒரு உண்மை நிச்சயமானதாக உள்ளது: அவர் அவளுக்குப் போதித்திருக்கவில்லை என்றால், யாரேனும் ஒருவர் அவளுக்குப் போதித்திருந்தார், மற்றும் அவளுக்கு நன்கு போதித்திருந்தார், ஏனெனில் அவள் தனது மதத்திற்கான, யாவையும்-அல்லது-ஒன்றுமில்லை என்று பரிந்துரைக்கும் அக்கினியால் புடமிடப்பட்டவளாகி, ஒவ்வொருவரும் பாகாலைப் பணிந்துகொள்ளச் செய்வதைக் குறியாகக் கொண்டிருந்தாள்.[4]

அவளது மதத்தை, அவளுடைய குடும்பத்தைவிட மேலானதாகக் கருதினாள். அவளது கணவன் ஆகாபைவிட அவளது ஊழியத்தை மேலானதாகக் கருதினாள். அவள் ஆகாபின்மீதல்ல, ஆனால் தனது புறதெய்வமான பாகாலின்மீது ஒரு ஆழமான அன்புடன் வடக்கு ராஜ்யத் திற்கு வந்தாள். அவளைப் பொறுத்தமட்டில், ஒரு அரசரைத் திருமணம் செய்துகொள்ளுதல் என்பது தனது மதத்தைப் பரப்பவும் போதிக்கவும் தேவையான நிதிகளையும் வாய்ப்புக்களையும் கொண்டிருத்தல் என்பதாகவே இருந்தது. ஆகையால், அவளை இஸ்ரவேலின் அரசியாக ஏற்றுக்கொண்டது என்பது ஆகாபும் அவர் தந்தையான உம்ரியும் மேற்கொண்ட மிகமோசமான முடிவுகளில் ஒன்றாயிருந்தது. யேசபேலுடன் ஆகாப் (திருமணத்தில்) ஒன்றித்தது யெரொபெயாமின் பொன்கன்றுக்குட்டிகளைப் பின்பற்றியதற்கும் அப்பால் சென்ற பாவம் என்று 16:31ல் மதிக்கப்படுகிறது:

> நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களில் நடப்பது அவனுக்குக் கொஞ்சக்காரியமென்று நினைத்தாற்போல் அவன் சீதோனியரின்[5] ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி யேசபேலை விவாகம்பண்ணினதுமல்லாமல், அவன் போய் பாகாலையும் சேவித்து அதைப் பணிந்துகொண்டு, ...

இவ்வசனப்பகுதியானது, யெரொபெயாமின் பொல்லாங்கான நடக்கையைப் பின்பற்றுதல் என்பது ‘‘அவனுக்குக் கொஞ்சக்காரியமாய் இருந்தது’’ என்று கருத்துத் தெரிவிக்கிறது. யேசபேலுடன் அவரது திருமணம் என்பது மிகவும் மோசமானதாக இருந்தது. அவள் ஆகாபுக்குப் பின்னால் இருந்த தீய ஆவியாக, வல்லமை நிறைந்த ஆளுமைத்தன்மை உடையவளாக இருந்தாள். நாம், ‘‘தன் மனைவியாகிய யேசபேல் தூண்டிவிட்டபடியே, கர்த்தரின் பார்வைக்குப்

பொல்லாப்பானதைச் செய்ய, தன்னை விற்றுப்போட்ட ஆகாபைப்போல் ஒருவனுமில்லை" என்று வாசிக்கின்றோம் (21:25).

ஆகாப் ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டிருக்கவில்லை; அவர் ஒரு மதத்தை - கொடுமையான, சீரழிவான ஒரு மதத்தை - திருமணம் செய்துகொண்டிருந்தார். யேசபேலைப் பிரியப்படுத்துவதற்காக, ஆகாப் பாகாலை ஆராதிப்பதற்கு ஒரு இடத்தை சமாரியாவில் கட்டியெழுப்ப வேண்டியிருந்தது, அதில் ஒரு கோவிலும், பாகாலுக்கு ஒரு பலிபீடமும், பாகாலின் பெண்துணையைப் பிரதிநிதித்துவப்படுத்திய அஷேரா என்ற மரத்தூணும் இருந்தன (16:32, 33). உணர்வுகளில் பலத்த சித்தம் கொண்டிருந்த பெண்ணான யேசபேல், தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு, பலவீனமான சித்தம் கொண்டிருந்த தன் கணவரைச் சாய்த்துப் போட்டாள். அவள் தனது வேலையில் குறியாய் இருந்தாள். அவளது வழியில் எதுவும் நிற்கப்போவதில்லை.

அவளது ஒப்புக்கொடுத்தலின் ஆழத்தில் இருந்து, புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்கள் கற்றுக்கொள்ள முடியும். கிறிஸ்துவின் கர்த்தத்துவத்திற்கும் உலகம் முழுவதும் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கும் எல்லாவற்றையும் தியாகம் செய்கின்ற அர்ப்பணித்தல் கொண்ட ஒப்புவிப்பு என்பதே உண்மையான சபைக்கு முதலாவதும் முக்கியமானதுமான தேவையாக உள்ளது. சீஷத்துவத்திற்கு இயேசுவின் தர அளவை உயர்ந்ததாகவும் வற்புறுத்துவதாகவும் உள்ளது:

> "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (லூக்கா 14:26).

பாகாலுக்கு யேசபேலின் சரணடைதல், அவள் ஒரு மனைவி தாய் மற்றும் தோழியாக இருந்திருக்க வேண்டியவற்றில் அவளைக் கெடுத்துப் போட்டது. யேசபேல் மிகச்சரியாக, பாகாலியம் உண்டாக்கிய நிலைபிறழ்ந்த நபரின் வகையாக இருந்தாள். பாகாலின் ஆராதனைக்குத் தன்னை ஒப்புவித்தல் என்பது, எவரொருவரையும் மாண்புமிக்க மனிதப் பிறவியாக அல்ல, ஆனால் பிசாசுத்தனமானவராக மாற்றிவிடும். யேசபேல் அவள் ஆராதிக்கும் பொருளைப் போன்றவளாகவே ஆனாள்.

கிறிஸ்தவர்கள் ஆகின்றவர்களைக் கிறிஸ்தவமானது கெடுத்துப் போடுவதில்லை. அதன் முழுமைத்தன்மை வாய்ந்த இயல்பு மற்றும் மனித ஆளுகைத்தன்மையின்மீது மாண்புமிக்க அதன் செயல்விளைவு ஆகியவற்றினிமித்தம், கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தல் என்பது அன்பார்ந்த தந்தையர்கள் மற்றும் தாய்கள், மனைவிகள் மற்றும் கணவர்கள், மற்றும் நண்பர்களை உருவாக்கும். நமக்கு அன்பானவர்கள்மீது நாம் குறைவாக அல்ல, ஆனால் அதிகமாக அன்பு செலுத்துவோம். நாம் அவர்களைத் தக்க வகையில் நேசிக்கக் கற்றுக்கொள்வோம். நாம் தேவனை மிகமேலாக அன்புகூரும்போது, நாம் ஒருவர் மற்றவரையும் உலகத்தையும் அன்புகூர

வேண்டிய பிரகாரம் அன்புகூருவோம்.

## பேரழிவை ஏற்படுத்திய தவறு

பிசாசின் ஊழியக்காரன் தவறின் - நிந்தனைக்குரிய, ஆக்கினைத் தீர்ப்புக்குரிய தவறின் - பரிந்துரையாளனாக இருக்கின்றான் என்பதையும் யேசபேல் விவரிக்கின்றாள். பொறுப்புள்ள ஒவ்வொரு மனிதருக்கும் போதிக்கும் பணிப்பொறுப்பைத் தேவன் கொடுத்திருக்கின்றார் (எபேசியர் 6:1-4; நீதிமொழிகள் 22:6), ஆனால் அவர் தமது சத்தியத்தை மாத்திரமே போதிக்க வேண்டும் என்ற எச்சரிக்கையுடன் அந்தக் கட்டளையை கொடுத்திருக்கின்றார் (யோவான் 8:32). ஆகையால் போதித்தல் என்பது, நல்ல முறையில் செய்யப்பட வேண்டிய மற்றும் இலேசாக எடுத்துக் கொள்ளப்பட முடியாத முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பாக உள்ளது (யாக்கோபு 3:1, 2). யேசபேல், போதிப்பதற்கான தனது பொறுப்பை ஏற்றுக்கொண்டாள், ஆனால் அவள் தேவன் கட்டளையிட்டிருந்ததற்கு எதிராக, ஒரு தவறான, துன்மார்க்கமான மதத்தைப் போதிப்பது என்ற பயங்கரமான தெரிவை ஏற்படுத்தினாள்.

பிசாசின் ஊழியக்காரியினுடைய இந்தச் சித்தரிப்பில் நாம் இருதயத்தைக் கிடுக்கிப்பிடி போடும் கூக்குரலைக் காணுகின்றோம்: பல திறமைகள் வாய்க்கப்பெற்றிருந்த யேசபேல் என்ற பெண், தவறைப் போதிக்கத் தனது வாழ்வை ஒப்புக்கொடுத்தாள்! அவள் தனது சக்திகளை, அதேபோன்ற வழியில் தேவனுடைய பரிசுத்தமான சத்தியத்தை அறியச் செய்வதற்கு ஒப்புக்கொடுத்திருந்தால், நாம் அவளை ஒரு வீராங்கணையாக, தேவனுடைய விசுவாச அறைவீட்டில் ஒரு வேட்பாளராக மதித்திருப் போம். அவள் பொய்களைப் பரப்புவதற்குத் தன்னை அர்ப்பணித் திருந்ததால், நாம் அவளைக் குறித்துப் பரிதபிக்கின்றோம், அவளைப் பழித்துரைக்கின்றோம், அவளைத் தவிர்க்கின்றோம், மற்றும் நமது பிள்ளைகளுக்கு அவள் பெயரை வைப்பதை, அருவருப்புடன் மறுக் கின்றோம். அவள் தனது வாழ்வைத் தூக்கி எறிந்தது மட்டுமின்றி, அதை அவள் ஒரு தவறான மதத்திற்காகத் தூக்கியெறிந்தாள்.

கி.மு. பதினான்காம் நூற்றாண்டில் இருந்து., வெளியே கொண்டு வரப்பட்ட உகாரிட்டிக் பொருட்களில் இருந்து, நாம் பாகாலுக்குச் செய்யப்பட்ட ஆராதனையைப் பற்றி அறிகின்றோம்.[6] பாகாலியம் பலஸ்தீனப்பகுதியின் விசேஷித்த பண்பாயிருந்த, ஆண்டின் ஈரமான மற்றும் உலர்ந்த பருவங்களை அடிப்படையாகக் கொண்டிருந்ததாகக் காணப்படுகிறது. பாகால் புராணத்தின்படி, பாகாலும் ஆனாத்தும் சகோதர சகோதரியாகவும், காதலர்களாகவும் இருந்தனர். பாகால் மரணத்தின் கடவுளான மோட் என்ற தனது விரோதியினால், கொல் லப்பட்டு உண்ணப்பட்டான். பூமி தனது பயிர்களை விளைவிக்கும்படி பாகால் செய்ததினால், அவனது மரணம் உலர்ந்த பருவத்தைக் கொண்டு வந்தது மற்றும் தாவரங்களை மடியச் செய்தது. ஆனாத் அல்லது பழைய ஏற்பாடு அழைக்கின்றபடி அஷீரா என்பவள் (16:33; தமிழ் வேதாகமத்தில் இப்பெயர் காணப்படவில்லை), பாகாலைத் தேடிச்சென்றாள். மோட்

என்பவன் செய்திருந்ததைக் கண்டுபிடித்ததால், அவள் அவனைக் கொன்று, துண்டுகளாக வெட்டிப் போட்டு, அவனது மாம்சத்தின் துண்டுகளைப் பறவைகள் உண்ணும்படி நிலங்களின்மீது பரவலாக வீசியெறிந்தாள். மோட்டின் உடல் பாகங்கள் நிலங்களின்மீது சிதறப்பட்ட பின்பு, பாகால் மீண்டும் உயிர்பெற்று வந்தான். காதலர்களுக்கு இடையிலான பாலுறவு ஒன்றிப்பு, மழைக்குக் காரணமாகி நிலத்திற்கு வளத்தை மீண்டும் கொண்டு வந்தது. இவ்விதமாக, பாகாலின் மதமானது, மதரீதியான விபசாரம் போன்ற எல்லா வகைகளிலுமான பாலுறவு பிறசூழ்நிலைகளை உடையதாயிருந்தது. இந்த மதம் அனேகமாக, குழந்தைகளைப் பலியிடுதலையும் உள்ளடக்கியிருந்தது. இது சீரழிவு, புராணம் மற்றும் ஒழுக்கவீனம் ஆகியவற்றிற்கான மதமாக - நம்ப இயலாத மதமாக, அசுத்தத்தையும் துன்மார்க்கத்தையும் முக்கிய பகுதியாகக் கொண்டிருந்தது.

யெகோவாவிற்குச் செய்யப்படும் ஆராதனையை இந்த மதத்தைக் கொண்டு இடம் மாற்றுதல் என்ற யேசபேலின் நோக்கம், அவளது செயல்களின் மிதமிஞ்சிய உணர்வற்ற தன்மையைக் காண்பிக்கிறது. அவள், இஸ்ரவேலின் தேவனும், எல்லா நாடுகளின் தேவனுமாகிய யெகோவாவை வெறுத்தாள் என்பது உறுதி. அவருக்குச் செய்யப்படும் ஆராதனை அழியவேண்டும் என்று அவள் விரும்பி, அதை உண்மை நிலையாக்குவதற்குத் தனது அதிகாரத்தில் செய்ய முடிந்த எல்லாவற்றையும் செய்து வந்தாள். அவள் ஒவ்வொரு நாளும் உலகத்தை எதிர்நோக்குவதற்கு முன்பு துன்மார்க்கத்தில் ஊறியிருந்திருக்க வேண்டும்.

தேவனுடைய உண்மையான மதத்தை அறிவித்தல் என்பதே, மனிதன் அறியக்கூடியவற்றிலேயே ஞானமிக்க மற்றும் மிகவும் வளம்பொருந்திய முயற்சியாக உள்ளது, ஆனால் பொய்யான விசுவாசத்தை பரிந்துரைத்தல் என்பது ஒருவரின் காலம் மற்றும் சக்தி ஆகியவற்றை மிகமோசமாகச் செலவழிக்கச் சாத்தியக்கூறுள்ளதாகவும் மற்றவர்களுக்குச் செய்யக்கூடியவற்றிலேயே மிகவும் மோசமான செயலாகவும் உள்ளது. தேவனுடைய உண்மையான மதம், மனிதனுக்கு மிகவும் அவசரமான தேவையாகவும் மிகத்தூய்மையான ஆசீர்வாதமாகவும் உள்ளது; மதரீதியான தவறு மிகமோசமான சாபமாகவும் மனிதனுக்கு வரும் மிகவும் இழிவான வாதையாகவும் உள்ளது, தேவனுடைய மதம் இரட்சித்து குணமாக்குகிறது; விசுவாச விலக்கம் கொண்ட மதம் ஆக்கினைத் தீர்ப்புக்கு உள்ளாக்கி அழிக்கிறது.

ஆராதிப்பதற்கான மனிதனின் விருப்பத்தைப் பிசாசு நீக்கிப்போட இயலாது; ஆனால் அவன் அந்த விருப்பத்தை, வாழ்வில் பொய்யான, உணர்வுகளுக்கு திருப்தியளிக்கும் முறைமை மற்றும் ஆராதனையைக் கொண்டு, ஓரளவுக்கு திருப்தி செய்விக்க முடியும். யேசபேலின் மூலமாக பிசாசானவன், தேவன்மீது மனிதனின் நெருக்கமான ஏக்கத்தை, புறதெய்வ விக்கிரகாரதனையைக் கொண்டு மாற்றிப்போட நாடினான். தேவனுடைய மதத்திற்குப் பிசாசின் பதிலியைக் கொண்டு, மனித இனத்தைத் தீட்டுப்படுத்துதல், சிறுமைப்படுத்துதல் மற்றும் அற்பமாக்குதல் என்பதே அவளது ஊழியமாயிருந்தது.

## மூர்க்கமான சக்தி

பிசாசின் தூதாள் என்ற வகையில் யேசபேல், தனது மதத்திற்கு இஸ்ரவேலில் இடம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக மூர்க்கமான சக்தியைச் செயல்படுத்தினாள். அவளது போதனை, ராஜரீகப் பலவந்தத்துடனும் துன்புறுத்துதலின் இரும்புக் கரத்துடனும் இணைந்திருந்தது.

அவள் ஏராளமான மூட்டை முடிச்சுக்களுடன் இஸ்ரவேலுக்குள் வந்திருந்தாள். அவளைப் பின்தொடர்ந்து வந்த ஏராளமானவர்களில் பாகாலின் தீர்க்கதரிசிகள் 450 பேரும் பாகாலின் மற்ற ஆசாரியர்கள் 400 பேரும் உள்ளடங்கியிருந்தனர். இவர்கள் அரண்மனையில் உணவு உண்ணும் நபர்களின் வரிசையில் வைத்துக் காப்பாற்றப்பட்டிருந்தனர். செல்வாக்கின் பலத்த புயத்துடன் இஸ்ரவேல் நாடு முழுவதிலும் சென்று மக்களைப் பாகாலியத்திற்குத் திருப்புதலே இவர்களின் கடமை யாயிருந்தது. இவர்களுடைய போதனையின் செல்வாக்கும் பலவந்தமும் நாடு முழுவதிலும் உணரப்பட்டது.

யேசபேல், சட்டப்பூர்வமாக அரசரின் துணையாளியாக - நாட்டின் ஆட்சியாளராக அல்ல, ஆனால் அவரது மனைவியாக - மாத்திரம் இருந்த போதிலும், அவளது நம்பிக்கைக்குரிய ஆதரவாளர்கள், யெகோவாவின் தீர்க்கதரிசிகள் யாவரையும் மரணதண்டனைக்கு உட்படுத்தப் போதுமான செல்வாக்கை அவள் இன்னமும் பிரயோகித்தாள் (18:4-13).[7] அவள் தன்னையே தேவனுடைய இடத்தில் வைத்து, யார் வாழவேண்டும் அல்லது சாக வேண்டும் என்பதைத் தீர்மானம் செய்தாள். அவளது சட்டமானது, "யெகோவாவின் தீர்க்கதரிசி எவனும் சாகப் பாத்திரனாய் இருக்கின்றான், நான் அவனைக் கண்டுபிடிக்க நேர்ந்தால், அவன் சாகவே சாவான்" என்றிருந்ததாகக் காணப்படுகிறது. ஒரு சில தீர்க்கதரிசிகள் அவளது பயங்கரமான ஆட்சிக்குத் தப்பியிருந்தனர், ஆனால் தேவனுடைய தீர்க்கதரிசிகளில் பலர், அவளது கொலைகாரச் சூழ்ச்சியினால் கொன்று போடப்பட்டனர்.

ஆகாபின் ஊழியக்காரர்களின் ஒருவரான ஒபதியா, ஒரு நூறு தீர்க்கதரிசிகளைக் குகைகளில் ஒளித்து வைத்து அவர்களுக்கு உணவளித்து வந்தார். இவ்வாறு அவர்களை அவர், அவளது தயக்கமற்ற தாக்குதல்களில் இருந்து பாதுகாத்தார்.

> ... யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளைச் சங்கரிக்கிறபோது, ஒபதியா நூறு தீர்க்கதரிசிகளைச் சேர்த்து, அவர்களை கெபிக்கு ஐம்பது ஐம்பது பேராக ஒளித்து வைத்து, அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து, அவர்களை பராமரித்தான் (18:4; 18:13ஐக் காணவும்).

கர்மேல் மலையின்மீது, மாபெரும் போராட்டத்திற்குப் பின்பு, யேசபேல் எலியாவைக்கூடக் கொலை செய்ய முயற்சித்தாள், ஆனால் அதில் அவள் வெற்றிபெறவில்லை:

*எலியா செய்த எல்லாவற்யையும், அவன் தீர்க்கதரிசிகளெல்லாரையும் பட்டயத்தாலே கொன்றுபோட்ட செய்தி அனைத்தையும், ஆகாப் யேசபேலுக்கு அறிவித்தான். அப்பொழுது யேசபேல் எலியாவி னிடத்தில் ஆள் அனுப்பி: "அவர்களில் ஒவ்வொருவனுடைய பிராணனுக்குச் செய்யப்பட்டதுபோல, நான் நாளை இந்நேரத்தில் உன் பிராணனுக்குச் செய்யாதேபோனால், தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள்" என்று சொல்லச்சொன்னாள் (19:1, 2).*

இவ்விடத்தில் நாம் ஒரு பாடம் கற்க முடியும். பிசாசானவன் சக்தியைப் பயன்படுத்துகின்றான், ஆனால் கிறிஸ்தவர்கள் அவ்வாறு செய்வதில்லை. தேவனுடைய மக்கள் ஒருக்காலும், எவ்வகையிலான நிர்ப்பந்தத்தைப் பெருக்குதல் அல்லது செயல்படுத்துதல் - இது உபத்திரவப்படுத்துதலுக்கு மிகக்குறைவானதாகும் - என்பதில் புகலிடம் அடையக்கூடாது. கிறிஸ்தவம் என்பது, புறம்பான அச்சுறுத்தலின்மூலம் ஒருவருடைய இருதயத்தைப் பிழியும் மதமாக அல்ல, ஆனால் "பிடித்தல் மற்றும் போதித்தல்" என்ற மதமாக உள்ளது. இந்த மதம், பாவியினால் பேரார்வத்துடனும் உண்மையுடனும் தேர்ந்துகொள்ளப்படாவிட்டால், இது ஏற்றுக்கொள்ளப் பட்டதாயிருக்க முடியாது. எவரொருவரும் தமது சொந்த இருதயத்தில் விசுவாசித்தல் (ரோமர் 10:10) மற்றும் தமது சொந்த இருதயத்திலிருந்து சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிதல் (ரோமர் 6:17) என்பது மாத்திரமே அவர் கிறிஸ்துவுக்குள் வரும் ஒரே வழியாக உள்ளது. எவரொருவராலும் பலவந்தப்படுதல் என்பது, தேவனுக்குச் செய்யப்படும் இருதயப்பூர்வமான இந்த பதில்செயலை விலக்கிப்போடுகிறது.

இளம் சாரணர் இருவர், நகரத்தின் பிரதான வீதியில் இருந்த கடையொன்றுக்கு வந்தனர். அவர்கள் ஒரு கரடியுடன் சண்டையிட்டு இருந்தது போன்று உடல் முழுவதும் வியர்த்திருந்தனர் மற்றும் அவர்களின் முகங்கள் குப்பென்றிருந்தன. கடையின் எழுத்தர், "நீங்கள் இருவரும் என்ன செய்திருந்தீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அந்தப் பையன்களில் ஒருவன், "நாங்கள் இன்றைக்கான எங்கள் நற்செயலைச் செய்திருந்தோம். ஒரு முதிய பெண்மணி வீதியைக் கடந்து செல்ல நாங்கள் உதவினோம்" என்று பதில் கூறினான். அதற்கு அந்த எழுத்தர், "உண்மையாகவா?" "நீங்கள் எவ்வளவு நல்லவர்கள். அது ஒரு கடினமான வேலையல்ல என்பது நிச்சயம். நீங்கள் ஏன் இவ்வளவு உடல் வெப்பத்துடனும் வியர்வையுடனும் காணப்படுகின்றீர்கள்?" என்று புன்னகையுடன் கேட்டார். அதற்கு அந்தப் பையன்களில் ஒருவன், "அந்தப் பெண்மணி வீதியைக் கடந்து செல்ல விரும்பாதிருந்தாள்" என்று அசட்டுச் சிரிப்புடன் கூறினான்.

அது, யேசபேல் - சக்தியைப் பயன்படுத்தி - பாகாலுக்கு ஊழியம் செய்தது பற்றிய சித்தரிப்பாக உள்ளது. மக்கள் பாகாலைப் பணிந்துகொள்ள விரும்பாதிருந்தாலும், அவள் பாகாலுக்கு மக்கள் பணியும்படி செய்தாள், மற்றும் அவள் தேவனுடைய தீர்க்கதரிசிகளைக் கொன்றுபோட்டாள். அவளது சூழ்ச்சிகள், தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடு ஒன்றை வலியுறுத்துகின்றன. தேவன் மனிதரின்

*இருதயத்தை மதிக்கின்றார். அது விசுவாசத்திலும் அன்பிலும் முடிவு செய்வதற்கு இடமளிக்கின்றார்; சாத்தான், அவசியமானால் நீங்கள் அவனை ஆராதிக்கும்படி செய்ய விரும்புகின்றான்.*

## கொடுமையான சுயநலம்

*வரிகளுக்கு இடையில் வாசிக்கும்போது, நாம் யேசபேல் ஒரு நம்பமுடியாத சுயநலத்தினால் ஆதிக்கம் செலுத்தப்பட்டதைக் காணு கின்றோம். அவள் தன்னைச் சுற்றியே உலகம் சுழலுகிறது என்பது போன்று வாழ்ந்து வந்தாள்.*

*யேசபேலுக்குள் நாம் இந்த ஆவியைக் காணுகின்றபோது உண்மையில், நாம் திகைப்படையக் கூடாது. அவள் இதைக் கொண்டிராதிருந்தால்தான் நாம் அதிகம் திகைப்படைந்திருப்போம், ஏனெனில் சுயத்தை மையங் கொண்ட தன்மைக்கு ஆயுள்சந்தா செலுத்தாமல், ஒருவர் தன்னையே பிசாசின் வழிக்கு முழுமையாக ஒப்புக்கொடுக்க இயலாது. சுயநலம் என்பது பாவத்தின் முக்கிய கூறாக உள்ளது. பாவி என்பவர், தேவனுடைய வழிக்குப் பதிலாகத் தமது சொந்த வழியை வற்புறுத்துகின்றவர் என்பதற்கு அதிகமாக ஒன்றையும் கொண்டிருப்பதில்லை.*

*யேசபேலின் வாழ்வுநடை, ஆராதனை, மற்றும் பொல்லாங்கிற்கு ஒப்புவிப்பு ஆகியவற்றின் வெளிச்சத்தில், அவள் தனது கணவருக்காக நாபோத்தின் திராட்சத் தோட்டத்தைப் பெறுவதற்கு, நாபோத்தையும் அவரது மகன்களையும் ஒழித்துக் கட்டிய விஷயமானது அவளுக்கு இயல்பானதாகவே இருந்தது (21:15). ஒரு குடும்பம் என்பது அவளுக்கு ஒன்றையும் அர்த்தப்படுத்தவில்லை. அவளைப் பொறுத்தமட்டில், மக்கள் என்பவர்கள் "தூக்கியெறியப்படும் பொருட்களாக" இருந்தனர். அவளது வழியில் எவரேனும் குறுக்கிட்டால், அவள் அவர்களை அழிப்பதற்கு மூட்டைப்பூச்சியை நசுக்குவதற்கு அதிகமாக ஒன்றும் நினைக்கமாட்டாள். சுயநலம் என்பது அவளை, சத்தியம், நற்தன்மை ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் பார்வை இழந்துபோகச் செய்து, அவளது மூளை முழுவதையும்: "எனது" என்ற ஒரே வார்த்தையினால் நிரப்பியிருந்தது.*

*சுயநலம் மற்றும் சுயநலமின்மை ஆகியவற்றின் நேர்மாறான விஷயத்தில், கிறிஸ்தவத்திற்கும் பிசாசினுடைய மதத்திற்கும் இடையில் உள்ள குறிப்பிடத்தக்க வேறுபாடு மீண்டும் காணப்பட முடியும். கிறிஸ்து மற்றவர்கள்மீது அன்புகூர்ந்து அவர்களுக்காக மரித்தார்; கிறிஸ்தவர்கள் மற்றவர்களை நேசித்து அவர்களுக்காக வாழ்கின்றனர். பரிசுத்தமற்ற மக்கள் நிர்ப்பந்தம் செய்து கவர்ந்து கொள்கின்றனர்; அவர்கள் அச்சுறுத்தி, ஆதிக்கம் செலுத்தி, அதட்டுகின்றனர். கிறிஸ்து, தமது சீஷர்கள் மனிதகுலத் திற்கு சேவை செய்யும்படி அவர்களைப் பயிற்றுவித்தார்; பிசாசானவன் தனது சீஷர்களை, அவர்களின் சொந்த வழியை நாடி, மனிதகுலத்தினால் சேவிக்கப்படுவது எப்படி என்று பயிற்றுவிக்கின்றான்.*

*யேசபேல் தனக்காக வாழ்வதில் கைதேர்ந்தவளாயிருந்தாள்; அவள் பிசாசானவன் தனது வேலையாட்களில் இருக்கும்படி விரும்புவது என்ன என்பதற்குத் தலைசிறந்த காட்சிப்பொருளாய் இருந்தாள். அவள் பாவம்*

*மற்றும் சுயநலம் ஆகியவற்றின் உண்மையான இயல்பைச் சான்றுடன் விளக்கினாள். அவளுடைய மதமானது "நான்" என்ற வார்த்தையைக் கொண்டு உச்சரிக்கப்பட்டது என்பது அதன் பெரிய பண்பாயிருந்தது.*

## நிரந்தரமான கீழ்ப்படியாமை

*யேசபேலின் வாழ்வினுடைய முடிவு வரையிலும் தொடர்ந்து துன்மார்க்கம் என்பதே அவளுடைய குணமாயிருந்தது. அவள் ஒருக்காலும் மனந்திரும்பவில்லை, ஒருக்காலும் தேவனிடத்திற்கும் சத்தி யத்தினிடத்திற்கும் திரும்பவில்லை. அவளது இருதயம், தவறை விசுவாசித்தல் மற்றும் பாவத்தின் வஞ்சனை நிறைந்த தன்மை ஆகியவற்றினால் கடினப்படுத்தப்பட்டிருந்தது. உண்மையான தேவனைப் பற்றி அறியும் வாய்ப்புக்கள் அவளது வழியில் வந்தன, ஆனால் அவற்றை அவள் விரைவில் ஒழிக்க வேண்டிய குப்பையாக எண்ணித் தூக்கியெறிந்தாள். அவள் அவ்வப்போது, தேவனுடைய தீர்க்கதரிசிகள் பிரசங்கிப்பதைக் கேட்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருந்தாள், ஆனால் அவற்றை அவள் உற்றுக் கவனிக்க மறுத்து விட்டாள். அவள் தனது கண்களை மூடியவளாக, தனது காதுகளை அடைத்தவளாக, தனது இருதயம் சத்தியத்தை ஏற்றுக்கொள்வதை அனுமதிக்காதிருந்தாள்.*

*இஸ்ரவேல் மக்கள் எல்லாருடனும் யேசபேலும், கர்மேல் மலையில் நடக்கவிருந்த மாபெரும் போராட்டத்தைக் காண்பதற்கும், உண்மை யான தேவன் யார் என்பதை தனது சிந்தையில் என்றென்றைக்குமாகத் தீர்மானித்துக்கொள்வதற்கும் அழைக்கப்பட்டிருந்தாள் (1 இராஜாக்கள் 18). செல்வதற்கு அவள் மறுத்து விட்டாள். அவள் தனது மனதை (பொய்யான மதத்திற்கு) திடப்படுத்திக்கொண்டிருந்தாள், உண்மை யினால் அவள் தன்னைக் குழப்பிக்கொள்ள மாட்டாள்!*

*1 இராஜாக்கள் 20:1-4ல், பெனாதாத் மற்றும் மற்ற அரசர்கள் முப்பத்து இரண்டுபேர், சமாரியாவைச் சுற்றிச் சூழ்ந்து, அதை முற்றிக்கை போட்டனர் என்று நாம் வாசிக்கின்றோம். ஆகாப், தனது மனைவி களையும், பிள்ளைகளையும், வெள்ளியையும், பொன்னையும் பெனாதாத் எடுத்துக்கொள்ள முடியும் என்று ஒப்புக்கொள்ளுமளவிற்கு சமாரியாவின் தோல்வி மிகவும் முழுமையானதாக இருந்தது. ஆகாப் மேற்கொண்ட இப்படிப்பட்ட முடிவு யேசபேலை எவ்வளவாகப் பாதித்திருக்க வேண்டும்! எல்லா நம்பிக்கையும் அற்றுபோயிருந்தது; ஆகாபின் அந்தப்புறத்தில் இருந்த மற்றவர்களுடன் அவளும் சேர்ந்து, யுத்தத்தில் பிடிக்கப்பட்ட அடிமைகளாக பெனாதாத் வசமாய் ஒப்புவிக்கப்பட வேண்டியதா யிருந்தது. பின்பு, யேசபேலையும் மற்ற மனைவிகளையும் பெனாதாத்தின் கைகளிலிருந்து யெகோவா விடுவித்தபின், எந்த வகையிலும் அவன் நன்றி தெரிவிக்கவில்லை. அவளது தெய்வமான பாகால், அவளை காப்பாற்ற முடியாதிருந்தான். புறதெய்வ வணக்கம் செய்யும் அரசனிடம் இருந்து யெகோவாவே தன்னைக் காப்பாற்றினார் என்று அவள் அறிந்திருந்தாள், ஆனால் ஒரு தகரக்கூரை, மழையின் மெல்லிய துளிகளை எதிர்த்துத் தள்ளுவது போன்று, அவளுடைய கடினப்பட்ட இருதயம், சத்தியத்தை*

எதிர்த்து தள்ளியது.

யேசபேல் செய்வித்த கொலைகள் மற்றும் தேவனுடைய பிரமாணங்களின் ஒழுக்கம் மற்றும் மதரீதியான பிரமாணங்களை மீறிய மற்ற செயல்கள் ஆகியவற்றின் காரணமாக, அவளுக்கு எதிராக ஒரு பயங்கரமான தெய்வீகத் தண்டனை அறிவிக்கப்பட்டது. யெஸ்ரயேலின் மதிலுக்கு அருகில் நாய்கள் அவள் உடலைத் தின்னும். பிற்பாடு, யெகூவை அரசராக அபிஷேகம் செய்த இளம் தீர்க்கதரிசி, தேவனிடத்தில் இருந்து வந்த ஒரு நியமனப்பணியை நிறைவேற்றும்படி அவருக்கு [யெகூவுக்கு]க் கட்டளையிட்டார்:

> "நான் என் ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளின் இரத்தப்பழியையும், கர்த்தருடைய சகல ஊழியக்காரரின் இரத்தப்பழியையும், யேசபேலின் கையிலே வாங்கும்படிக்கு நீ உன் ஆண்டவனாகிய ஆகாபின் குடும்பத்தை அழித்துவிடக்கடவாய் ... யேசபேலை யெஸ்ரயேலின் நிலத்திலே நாய்கள் தின்றுவிடும்; அவளை அடக்கம் பண்ணுகிறவன் இல்லை" ... (2 இராஜாக்கள் 9:7-10).

இந்தத் தீர்க்கதரிசனம் விவரமாக நிறைவேற்றப்பட்டது. ஆகாபின் மரணத்திற்குப்பின் பதினோரு ஆண்டுகள் கழித்து, அரச குடும்பத்தின்மீது யெகூ இரக்கமற்ற பழிவாங்குதலைச் செயல்படுத்தினார். தேவனுடைய நியாயத்தீர்ப்பு என்ற புகைவண்டி, நிலையத்திற்குள் வருகையில், யேசபேல் தனது முகத்தை அலங்கரித்து, தனது தலையைச் சிங்காரித்துக் கொண்டு, ஜன்னல்வழியாய் எட்டிப் பார்த்தாள் (2 இராஜாக்கள் 9:30-32). யெகூ நெருங்கி வருகையில், அவள் அவரை அழைத்து, "தன் ஆண்டவனைக் கொன்ற சிம்ரி ஷேமம் அடைந்தானா?"[8] என்று கேட்டாள். யெகூ தமது முகத்தை அந்த ஜன்னலுக்கு நேராக ஏறெடுத்து, "என் பட்சத்தில் இருக்கிறது யார்? யார்?" என்று கேட்டார் (வசனம் 31). இரண்டு அல்லது மூன்று அலிகள் (பிரதானிகள்) அவரை எட்டிப் பார்த்தார்கள். யெகூ, "அவளை கீழே தள்ளுங்கள்," என்று கட்டளையிட்டார் (வசனம் 32). அவர்கள் தயக்கமின்றிக் கீழ்ப்படிந்தனர். யேசபேல் அவரது இரதத்திற்கு முன்பாக வந்து விழுந்தாள். அவர் (அவளைக் கொல்லும்) நோக்கத்துடன் அவள்மீது இரதத்தை ஓட்டினார், அவளது இரத்தம் குதிரைகள்மீதும் மதில்மீதும் தெறித்தது. சுமார் ஒரு மணிநேரத்திற்குப் பின்பு, இறந்துபோன பெண் ஒரு அரசரின் மகள் என்பதை நினைவுகூர்ந்த யெகூ, அவளைப் புதைப்பதற்கு கட்டளை கொடுத்தார்; ஆனால் கிழக்கத்திய நாடுகளின் துப்புரவாளர்களான நாய்கள், போர் வீரர்களை முந்திகொண்டன என்று அவர்கள் கண்டனர். மேலும் அவளது தலையோடு, அவளது கால்கள், மற்றும் அவளது உள்ளங்கைகள் தவிர வேறெதுவும் மீந்திருக்கவில்லை. இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து, நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்,

> ஆகையால் அவர்கள் திரும்பவந்து அவனுக்கு அறிவித்தார்கள்; அப்பொழுது அவன்: "இது கர்த்தர் திஸ்பியனாகிய எலியா என்னும் தம்முடைய ஊழியக்காரனைக்கொண்டு சொன்ன வார்த்தை;

> ‘யெஸ்ரயேலின் நிலத்திலே நாய்கள் யேசபேலின் மாம்சத்தைத் தின்னும் என்றும், இன்னது யேசபேலென்று சொல்லக்கூடாதபடிக்கு, “யேசபேலின் பிரேதம்” யெஸ்ரயேலின் நிலத்திலே வயல்வெளியின்மேல் போடும் எருவைப்போல் ஆகும் என்றும் சொன்னாரே என்றான்’ ” (2 இராஜாக்கள் 9:36, 37; 1 இராஜாக்கள் 21:23ஐக் காணவும்).

*தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவளுக்கு எதிராக முழுமையாக நிறைவேறிற்று. யேசபேல் தனது பயங்கரமான மரணம் வரையிலும் ஒரு கடினமான இருதயத்தைப் பராமரித்தாள். அவள் தனது துன்மார்க்கத்திற்கான நிறைவான கிரயத்தைச் செலுத்தும் வரையிலும் பிசாசின் ஊழியத்திற்கு உண்மைத்தன்மையுடன் இருந்தாள்.*

*பிசாசின் ஊழியக்காரன் முடிவு வரையிலும் அவனது நோக்கங்களுக்கு உண்மையுள்ளவனாக இருந்தாக வேண்டும். அவன் தற்காலிகமாக மாத்திரம் கடினப்பட்ட இருதயத்தைக் கொண்டிருக்க முடியாது. அவன் தனது வாழ்நாள் முழுவதற்கும் வியாதிப்பட்ட இருதயத்தை வெளிக்காண்பித்தாக வேண்டும். அவனது வாழ்வு முழுமையான ஒப்புக்கொடுத்தலைக் காண்பித்தல் அவசியமாயிருக்கிறது. ஒருவன் சற்றுக்காலம் மாத்திரம் பிசாசைச் சேவித்துவிட்டுப் பின் முகத்தைத் திருப்பினால் - தேவனிடமாய்த் திரும்பி அவரைச் சேவிக்கத் தொடங்கினால் - அந்த மனமாற்றமானது, பிசாசைப் பின்பற்றுவதில் உள்ள அறிவற்ற தன்மையைப் பிறருக்குக் காண்பிக்கும். துன்புறுத்துபவராக இருந்த சவுல், துன்புறுத்தப்படுபவரான பவுலான போது, பிசாசு தனது விலையேறப்பெற்ற ஊழியக்காரரை இழந்தான், மற்றும் தேவன் தமது மிகவும் செயல்விளைவுள்ள ஊழியக்காரரை ஆதாயப்படுத்திக்கொண்டார். ஒருவன் தனது துன்மார்க்கமான வாழ்வின் கசப்பான விளைவுகளை எதிர்கொள்ளும் வரையிலும் பிசாசுடன் தொடர்ந்து இருத்தல் என்பது பிசாசுக்கு நல்லதொரு விளம்பரமாக இருக்கிறது.*

*யேசபேல் அளித்திருந்த சேவையானது, மரணம் வரையிலும் பொல்லாங்குடன் நடக்கும் வகையாக இருந்தது. அவள் ஒருக்காலும் சத்தியத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுத்து இருந்ததில்லை. மரணம் அவளை நெருங்கியபோது, அதை அவள், தேவனை நோக்கிய கலகம் செய்யும் இருதயத்துடனான கண்களில் நோக்கினாள். நித்தியத்தின் சுவாசம்கூட அவளது பாவம் நிறைந்த இருதயத்தை மென்மையாக்கவில்லை.*

## முடிவுரை

*புறதெய்வத்திற்குச் செய்யும் ஊழியத்தில் யேசபேலின் செயல்முறைகளைக் கண்டுள்ள நிலையில் நாம் இப்போது, அவளது புகைப்படத்தைக் கீழே வைத்துவிட்டு, நாம் கற்றுள்ளவற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்போமாக. இந்த வாழும்-வண்ணமானதை, மாம்சம்-மற்றும் -இரத்தம் ஆகியவற்றினால் ஆன நொடிப்பொழுதுப் படத்தைக் கண்ணோக்குதல் சந்தோஷமானதாக இருந்ததில்லை என்று நான் அறிந்திருக்கிறேன். தவறை, சுயநலத்தை, விரும்பத்தகாத சக்தியை, மற்றும் பொல்லாத இருதயத்தை*

நாம் கண்டோம். இந்த சித்தரிப்பானது நமக்கு, சுவிசேஷ ஊழியத்தில் என்ன செய்யக்கூடாது என்பதை நினைவூட்டி யுள்ளது. நாம் தவறின்மீதல்ல, ஆனால் சத்தியத்தின்மீது வைராக்கியம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். நாம் புறதெய்வவியத்தையல்ல, ஆனால் சத்தியத்தை நேசித்து, அதன்படி வாழ்ந்து, அதற்காக உழைக்கவேண்டும். நாம் கிறிஸ்துவின் சுயநலமற்ற ஆவியை மேற் கொண்டவர்களாக, எவரொருவரையும் கிறிஸ்துவினிடத்தில் வரும்படி ஒருக்காலும் வலுக்கட்டாயம் செய்யாமல், வலிவைச் செயல்படுத்தாமல், அல்லது வற்புறுத்தாமல் இருக்க வேண்டும். நாம் அவர்களுக்குப் போதிக்க வேண்டும், ஆம், ஆனால் நாம் அவர்களைக் கிறிஸ்துவின் சித்தத்திற்குக் கீழ்ப்படியும்படி அடிக்கவோ அல்லது சுத்தியல் கொண்டு இறுத்தவோ கூடாது. நாம் பிறரிடத்தில் வேண்டுகோள் விடுக்கலாம், ஆனால் அவர்களை நாம் தவறாகக் கையாளக்கூடாது. நாம் தவறு செய்கின்றபோது மனந்திரும்பவும், நம்மை மென்மையாக வைத்துக்கொள்ளவும், கர்த்தருக்கு முன்பாக நமது இருதயங்களைத் திறந்து காண்பிக்கவும் நமக்கு அறைகூவல் விடுக்கப்படுகிறது.

யேசபேல் தேவனைப் பற்றிய சத்தியத்தைக் கற்றுக்கொள்ளவில்லை, அவருக்கு இணங்கவில்லை, மற்றும் நாட்டு மக்களுக்கு முன்பாக நீதியுள்ள வாழ்வின் உதாரணத்தை வைக்கவில்லை என்பது எவ்வளவு பரிதாபத்திற் குரியதாக இருக்கிறது! அவள் தீருவில் வளர்க்கப்பட்டிருந்த நம்பிக்கையற்ற புறதெய்வவியத்திலேயே மரித்தாள் என்பது எவ்வளவு துன்பகரமானதாக இருக்கிறது! பல நூற்றாண்டுகளாக மற்ற மக்கள் எத்தனைபேர், சத்தியத்தை மறுப்பதிலும், ஒளியைக் காட்டிலும் தவறின் இருளை நேசிப்பதிலும் யேசபேலுடன் இணைந்திருக்கின்றனர்?

இஸ்ரவேலின் அரசர்களும் யூதாவின் அரசர்களும், யெகோவாவுக்குத் தங்கள் ஒப்புக்கொடுத்தலானது, யேசபேல் தனது துன்மார்க்கமான வழிகளில் இருந்து திரும்பி உண்மையான தேவனில் விசுவாசம் வைக்கும்படி அவளைக் கட்டுப்படுத்தும் வகையில் வாழாதிருந்தது எவ்வளவு வெட்கக் கேடானது! அவள் இஸ்ரவேலின் எதிர்காலத்தின்மீதும் புறதெய்வ விக்கிரகாராதனையில் அதன் வீழ்ச்சியின்மீதும் அப்படிப்பட்ட பலத்த கரத்தைக் கொண்டிராதவாறு அவளைத் தடுக்கும் அளவுக்கு அவர்கள் யெகோவா தேவனைப் போதிய அளவுக்கு அன்புகூராதிருந்தனர் என்பது கவலைக்குரியதாக இருக்கிறது.

இவ்விதமாக, யேசபேலின் வரலாறு மரணத்துடன் நடத்தலாக இருக்கிறது. அவள் உயிர்வாழ்ந்திருந்தபோதே மரித்தவளாய் இருந்தாள், அவளது மரணமானது, மரணங்களிலேயே மிக மோசமானதாக இருந்தது. யேசபேலின் நினைவுகூட, துன்மார்க்க வழிகள் மற்றும் ஒழுக்கவீனம் ஆகியவற்றிற்குப் பொருள்தருவதாக மாத்திரமே உள்ளது (வெளிப்படுத்தின விசேஷம் 2:20). தவறுக்காக - புறதெய்வ மதத்திற்காகப் பாவம் நிறைந்த, இருளான சடங்காச்சாரங்களுக்காக - அவள் வாழ்ந்ததுபோல வாழுதல் என்பது நரகத்திற்கு நல்வரவு கூறுவதாக உள்ளது. இந்த ஓட்டத்தை யார் தேர்ந்துகொள்வார்? இப்படிப்பட்ட வாழ்வானது பயங்கர மானதாகவும், அதன் முடிவு மிகவும் மோசமானதாகவும் உள்ளது. கிறிஸ்தவ

ஊழியக்காரராக வாழுதல் என்பது சிலவேளைகளில் கடினமானதாக உள்ளது, ஆனால் அதன் ஒய்வுக்காலப்பயன்கள் "இந்த உலகத்திற்கு வெளியே" உள்ளன. பிசாசின் ஊழியக்காரன் பொல்லாங்கினால் நிர்மூலமாக்கப்படுகின்றான், மற்றும் தேவனின்றி மரித்தலின் அச்சுறுத்தும் கணமும், தேவனுடைய நியாயத்தீர்ப்புத் தண்டனையின் கீழ் புறப்பட்டுச் செல்லுதலுமே அதன் முடிவாக உள்ளது.

பிசாசானவன் தனது ஊழியக்காரர்களுக்குத் தக்க தண்டனை என்ற நாணயங்களைக் கூலியாகக் கொடுக்கின்றான். ஒரு கருத்தில், அவனது ஊழியக்காரர்கள் தங்கள் சொந்த உழைப்பிற்கான விலையை தாங்களே செலுத்தியாக வேண்டும், ஏனெனில் - பிசாசானவன் அல்ல - அவர்களே ஒரு நாளில் மரித்து, தங்கள் செயல்களுக்குக் கணக்கு ஒப்புவிப்பதற்காகத் தேவனுக்கு முன்பாக நின்றாக வேண்டும். நீங்கள் யாருக்காகவேனும் உழைத்து, உங்கள் உழைப்பின் முடிவில் உங்கள் வேலைக்கு நீங்களே கூலி கொடுக்க வேண்டியிருப்பதை நீங்கள் எப்படி விரும்புவீர்கள்? யேசபேல் கண்டறிந்தபடி, பிசாசானவன் தனது ஊழியர்கள் அவனுக்காக வேலை செய்து தங்கள் சொந்தச் சம்பளத்தைத் தாங்களே செலுத்திக் கொள்வதையே கேட்கின்றான்.

கடைசியில், யேசபேல் பொல்லாங்கின் ஒவ்வொரு அம்சத்தையும் - அதன் வாழ்வை, அதன் குணத்தை, மற்றவர்கள்மீது அதன் செயல் விளைவை, மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக, அதன் நம்பிக்கையற்ற தன்மையை விவரிக்கின்றாள். அவளது வாழ்வானது, எவற்றைச் செய்யக் கூடாது என்பதற்கு ஒரு நினைவுச்சின்னமாக, செய்யக்கூடாத தவறுகள் பற்றிய நினைவூட்டுதலாக நிலைநிற்கிறது.

அவளது தலையோடு, உள்ளங்கைகள் மற்றும் பாதங்கள் யெஸ்ரயேலின் நிலத்தில் கிடந்ததைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், அவளது கல்லறைக் கல்லுக்கு ரோமர் 6:23ன் வார்த்தைகளை மட்டுமே நாம் ஆலோசனை தெரிவிக்க முடியும், இவ்வார்த்தைகள் பிசாசின் ஊழியத்திற்குத் தங்களை அர்ப்பணித்துள்ள எல்லா மக்களுக்குமான வெகுமதியை விவரிக்கின்றன: "பாவத்தின் சம்பளம் மரணம், ..." யேசபேல் தனது எஜமானாகிய சாத்தானுக்கு, தன்னால் செய்யக்கூடியதாயிருந்த எல்லாவற்றையும் செய்தாள், அவளுக்குக் கிடைத்த வெகுமதி என்னவாக இருந்தது? மரணம்!

**கற்க வேண்டிய பாடம்:**
**பிசாசானவனுடைய ஆப்பிள் பழங்கள் யாவையும்**
**அழுகியவைகளாக இருக்கின்றன.**

---

குறிப்புகள்

[1]இவ்விடத்தில் உள்ளடக்க நான் தேர்ந்துகொண்ட வார்த்தைகள், *euaggelizo, kataggello, kerusso, laleo, parresiazomai, pleroo,* மற்றும் *parakaleo* என்பவைகளாகும். எனது முடிவின்படி, இவைகள் புதிய ஏற்பாட்டுப் பிரசங்கித்தலை விளக்குவதற்குப்

பரிசுத்த ஆவியானவரால் பயன்படுத்தப்பட்ட திறவுகோல் வார்த்தைகளாகும். [2]ஆகாபின் ஆட்சியானது யூத வரலாற்றின் திருப்பு முனைகளில் ஒன்றாக இருந்தது. அந்தக் காலத்தில்தான் உண்மையிலேயே "உலகத்தின் தீர்மானமான யுத்தங்களில் ஒன்று" நடைபெற்றது. அது கர்த்தருக்கும் பாகாலுக்கும் இடையில் நடைபெற்ற யுத்தமாகும் (H. D. M. Spence and Joseph S. Exell, gen. eds., *Pulpit Commentary* [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1915; reprint ed., New York: Funk & Wagnalls Co., 1950], vol. 5, *First Kings*, by J. Hammond, 373). [3]"... [அசேரிமுஸ்] தமது சகோதரரான பெலெஸ் என்பவரால் கொலைசெய்யப்பட்டார், அந்த பெலெஸ் ராஜ்யத்தை எடுத்துக்கொண்டு, அவர் ஐம்பது ஆண்டுகள் உயிர்வாழ்ந் திருந்தபோது, அதை எட்டு மாதங்கள் அரசாண்டார்: அவர் அஸ்தரேத்தின் ஆசாரியரான இதோபலுஸ் [ஏத்பாகால்] என்பவரால் கொலைசெய்யப்பட்டார், அந்த இதோபலுஸ் முப்பத்து இரண்டு ஆண்டுகள் அரசாண்டார்: அவரைத் தொடர்ந்து அவரது மகன் பாதெசொரஸ் அரசாள வந்தார், ..." (Josephus *Against Apion* 1.18). [4]இந்த தெய்வம் மெல்க்கார்ட் என்று அழைக்கப்பட்டது, இது பலஸ்தீனத்தின் வளமைக்கான கடவுளான, பாகாலின் தீரியச் சொல்விளக்கம் என்று நாம் நியாயமாக உறுதிப்படுத்தலாம். [5]"சீதோனியர்" என்பது பெனிக்கியர் என்று பொருள்தரும் இன்னொரு சொல்லாகக் கருதப்பட வேண்டும். பழைய ஏற்பாட்டில் சீதோன் என்பது பெனிக்கியாவின் பிரதான நகரமாகக் காணப்படுகிறது, மற்றும் இப்பெயரானது முழு நாட்டிற்கும் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது. தீரு என்பது பெனிக்கியாவின் தலைநகராக இருந்தது. [6]இந்தப் புத்தகங்களில் சில பின்வரும் நூலில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன: J. B. Pritchard, ed., *The Ancient Near East: An Anthology of Texts and Pictures* (Princeton, N.J.: Princeton University Press, 1965), 92-118. [7]"தேவனுடைய தீர்க்கதரிசிகளை யேசபேல் கொலைசெய்வித்தது தவறானதாகக் கருதப்படுகையில், எலியாவினாலும் கர்மேல் பர்வதத்தில் அவருடன் நின்று கொண்டிருந்தவர்களினாலும் பாகாலின் தீர்க்கதரிசிகள் கொலைசெய்யப்பட்டது சரியானதாகக் கருதப்பட்டது ஏன்?" என்று கேள்வி கேட்கப்படலாம். இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது பல ஆலோசனைகள் மனதில் கொள்ளப்பட வேண்டும். முதலாவது, பாகாலின் தீர்க்கதரிசிகள், தேவனுடைய தீர்க்கதரிசிகளைக் கொன்றுபோடுவதற்காக யேசபேலினால் அனுப்பப்பட்டிருந்தனர். ஆகையால், அவர்கள் கொலைகாரர்கள் என்று கருதப்படுவதே ஏற்புடையதாயிருந்தது. இரண்டாவது, பாகாலின் மதம ானது கற்பனை செய்யப்படுவதிலேயே மிகவும் மோசமான மத மாக இருந்தது. எல்லாவிதமான பாலியல் ஒழுக்கக்கேடுகளும் மற்றும் சிறுபிள்ளைகளைப் பலியிடுவதும்கூட அது பரிந்துரைக்கும் ஆராதனையில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்த பாவங்கள் யாவும் பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தினால் கண்டனம் பண்ணப்பட்டிருந்தன மற்றும் இவைகளுக்கு மரண தண்டனை தரப்பட வேண்டியதாயிருந்தது. மூன்றாவது, இஸ்ரவேலை வீணான மற்றும் மதியீனமான பாவங்களுக்குள் வழிநடத்திய கள்ளத்தீர்க்கதரிசிகளின் சவுக்கை அற்றுப்போகச் செய்வதற்கு, எலியா தேவனின் நேரடியான கட்டளையின்கீழ் இருந்தார். தேவனுடைய தீர்க்கதரிசிகளைக் கொலை செய்வதற்குத் தூதுவர்களை யேசபேல் அனுப்பியது, தேவனுடைய ஊழியக்காரராகிய எலியாவை, அவர்களுக்கு மரணதண்டனை தரும்படிச் செய்திருந்தது. இவ்விதமாக, பாகாலின் தீர்க்கதரிசிகள் தங்களுக்குத் தண்டனையைத் தேவனிடத்தில் இருந்து பெற்றிருந்தனர்; பிற்பாடு, யேசபேலும் இத்தண்டனையைப் பெற்றுக்கொண்டாள். [8]ஜேம்ஸ் பர்ட்டன் காஃப்மேன் என்பவர் எழுதியுள்ள பின்வரும் பத்தி, இந்தக் காட்சியைப் பற்றிய நல்லதொரு தொகுப்புரையாக உள்ளது: "அவள் தனது மரண நாள் வரையிலும்

*தனது அரசிக்குரிய குணத்தைத் தக்கவைத்திருந்தாள்; மற்றும் அவள் தனது பணியின் முழு அரச உரிமைத்துவத்திலேயே இறந்தாள் (அவள் அனேகமாகத் தனது கிரீடத்தை அணிந்திருப்பாள்). யெகூவை அவள், அரசரைக் கொன்றவரான இன்னொரு சிம்ரி என்று குறிப்பிட்டு, சிம்ரி தனது கிரியைகளுக்குத் தக்கவற்றைத் தானே செலுத்தினார் என்பதை அவருக்கு நினைவூட்டினாள்"* (James Burton Coffman, *Second Kings* [Abilene, Tex.: ACU Press, 1992], 124).